கூனூர், பாஸ்டர் நிலையப் பணியாளர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தங்களது குறைகளைப் போக்க வேண்டி, கூனூர், பாஸ்டர் நிலையப் பணியாளர்கள், தொழிலாளர் நல ஆணையாளரிடம் மனு ஏதும் கொடுத்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்

(இ) கூனூரிலுள்ள பாஸ்டர் நிறுவனப் பணியாளர் சங்கம் 1969-ஆம் ஆண்டில், (1) அகவிலைப்படி நிலுவை, பணிக்கொடை, சிலவகைப் பணியாளர்களது சம்பள விதங்களை மாற்றியமைத்தல், (2) ஒரு தொழிலாளரை வேலைக்கு வைத்திராதிருத்தல் ஆகியவை குறித்த பிரச்சினைகளை எழுப்பியது. இந்த நிறுவனம், தொழில் தகராறுகள் சட்டத்தின் 2 (j) பிரிவின்படி, ஒரு தொழிற்சாலையின் செயல்வரம்பிற்குள் வாராததால் அரசு இதனை நீதிமன்றத் தீர்ப்பிற்கு விட 1970, மே திங்களில் மறுத்தது. தொழிலாளர்கள் தாக்கல் செய்த ரிட் மனு 20—1—1973-ல் உயர்நீதிமன்றத்தால் தள்ளிவிடப்பட்டது. சட்ட இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் நிறுவனத்தின் இயக்குநர், இப்பொருளை இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ள அல்லது அதனை நிறுவனத்தின் மத்தியக்குழு முன்பு வைத்த அடிப்படையில், பேச்சுவார்த்தை நடத்துமாறு கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளருக்குக் கட்டளையிடப்பட்டது. தமிழக அரசும், நீதிமன்றமும், பாஸ்டர் நிறுவனம் ஒரு தொழிற்சாலையல்ல என்று ஒருமுகமாக தீர்ப்பளித்துள்ளதால், தொழிலாளர் துறை, தொழில் தகராறுகள் சட்டத்தின்படி இதில் தலையிட வேண்டிய அவசியமில்லை. பாஸ்டர் நிறுவனத்திற்கும் அதன் தொழிலாளர் சங்கத்திற்கும் நேர்முக பேச்சுவார்த்தை நடப்பதாகக் கூறப்படுகிறது.

Tamil Nadu Chit Funds Act, 1961

* 12 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Chit Funds Act, 1961 (Act XXIV of 1961) is being strictly enforced ;

(b) the methods adopted for such enforcement ; and

(c) the number of cases charged and which ended in conviction during 1972 for contravention of the provisions o" the Act ?

தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம், 1961

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம் (சட்டம் எண். 24/1961) கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றதா ?

(இ) அவ்வாறு செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முறைகள் யாவை ?

(உ) இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக, 1972-ஆம் ஆண்டில் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டனையில் முடிந்த வழக்குகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவாவர்களே, ஆம்.

1972-ஆம் ஆண்டில் பல்வேறு வகைப்பட்ட குற்றங்களுக்காக 427 நேர்வுகளில் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 111 நேர்வுகள் அனுமதி பெருத சீட்டுகள் தொடர்பானவை. 289 நேர்வுகளில் தண்டனை அளிக்கப்பட்டது. மீதமுள்ள வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினக்கள் 13 முதல் 15 வரை ஒத்திப் போடப்படுகின்றன. வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

(1) **அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழு நேற்று நடந்த கூட்டத்தில், அவையின் அலுவல் குறித்து, கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது :—

19—1—1974	ஆளுநர் உரையின் மீது விவாதம்.
20—1—1974	விடுமுறை.